# இன்றைய இறைவார்த்தை

# 31-07-2015

**ஆண்டின் பொதுக்காலம் 17ஆம் வாரம் – வெள்ளி**
**முதல் ஆண்டு**

**முதல் வாசகம்:**

சபையாய்க் கூடி ஓய்வு நாளைப் புனிதமாய்க் கடைப்பிடியுங்கள்.

**லேவியர் நூலிலிருந்து வாசகம். 23 : 1, 4 – 11, 15 – 16, 27, 34 – 38**

ஆண்டவர் மோசேயிடம் கூறியது: நீங்கள் சபையாகக் கூடிக் குறிப்பிட்ட நாள்களில் புனிதமாய்க் கடைப்பிடிக்க வேண்டிய ஆண்டவரின் பண்டிகை நாள்களாவன: முதல் மாதம் பதினான்காம் நாள் மாலையில் ஆண்டவருக்கான பாஸ்கா. அந்த மாதம் பதினைந்தாம் நாள் ஆண்டவருக்கான புளிப்பற்ற அப்பப் பண்டிகை. ஏழு நாள் புளிப்பற்ற அப்பங்களை உண்பீர்கள். பண்டிகையின் முதல் நாள் சபை கூடும் புனித நாள். அன்று வேலை செய்யலாகாது. ஏழு நாளும் ஆண்டவருக்கு எரிபலி செலுத்த வேண்டும். ஏழாம் நாள் சபை கூடும் புனித நாள். அன்று வேலை செய்யலாகாது. ஆண்டவர் மோசேயிடம் கூறியது: இஸ்ரயேல் மக்களிடம் நீ சொல்ல வேண்டியது: நான் உங்களுக்குக் கொடுக்கும் நாட்டில் நீங்கள் வந்து அறுவடை செய்யும்போது அறுவடையின் முதல் விளைச்சலான ஒரு கதிர்க் கட்டினைக் குருவிடம் கொண்டுவர வேண்டும். உங்கள் சார்பாக ஏற்கத் தக்கதாக, குரு அந்தத் தானியக் கதிர்க்கட்டினை, ஓய்வு நாளுக்குப் பின்வரும் அடுத்த நாளில் ஆண்டவரின் திருமுன் ஆரத்திப் பலியாக்குவார். ஆரத்திப் பலியாகக் கதிர்க் கட்டினைக் கொண்டு வந்த ஓய்வு நாளின் மறு நாளிலிருந்து ஏழு வாரங்களைக் கணக்கிடவும். ஏழாம் ஓய்வு நாளுக்கு மறு நாளான ஐம்பதாம் நாளில் ஆண்டவருக்குப் புது உணவுப் படையலைச் செலுத்துங்கள். அந்த ஏழாம் மாதம் பத்தாம் நாள், பாவக் கழுவாய் நாள். புனித சபை கூடும் நாள். அன்று நீங்கள் உங்களையே தாழ்த்திக் கொண்டு, ஆண்டவருக்கு எரிபலி செலுத்த வேண்டும். ஏழாம் மாதம் பதினைந்தாம் நாளன்று ஆண்டவரின் கூடாரப் பெருவிழா தொடங்குகின்றது. அது ஏழு நாள்கள் தொடரும். முதல் நாள் திருப்பேரவை கூடும் நாள். அன்று எத்தகைய வேலையையும் செய்ய வேண்டாம். ஏழு நாள்களும் ஆண்டவருக்கு நெருப்புப் பலி செலுத்துங்கள். எட்டாம் நாளன்று திருப்பேரவை கூடும். அன்றும் ஆண்டவருக்கு நெருப்புப் பலி செலுத்துங்கள். அது நிறைவு நாள். அன்று எத்தகைய வேலையையும் செய்யலாகாது. ஓய்வு நாளில் ஆண்டவருக்குச் செலுத்தும் காணிக்கைகள், நேர்ச்சைகள், தன்னார்வப் பலிகள் தவிர, அந்தந்த நாள்களுக்கு ஏற்ப எரிபலி, உணவுப் படையல், இரத்தப் பலி, நீர்மப் படையல் முதலிய பலிகளைச் செலுத்தத்தக்கதாகவும், சபையாய்க் கூடி அந்த நாளைப் புனிதமாய்க் கடைப்பிடியுங்கள். இவையே நீங்கள் கொண்டாட வேண்டிய விழாக்கள்.

**ஆண்டவர் வழங்கும் அருள்வாக்கு.**
**இறைவா! உமக்கு நன்றி.**

**பதிலுரைப்பாடல்:**
**திருப்பாடல்: 81 : 2 – 3, 4 – 5, 9 – 10 (பல்லவி 1a)**
**பல்லவி: நமது வலிமையாகிய கடவுளை மகிழ்ந்து பாடுங்கள்.**

1. இன்னிசை எழுப்புங்கள். மத்தளம் கொட்டுங்கள். யாழும் சுரமண்டலமும் இசைத்து இனிமையாய்ப் பாடுங்கள். அமாவாசையில், பௌர்ணமியில், நமது திருவிழா நாளில் எக்காளம் ஊதுங்கள். பல்லவி

2. இது இஸ்ரயேல் மக்களுக்குரிய விதிமுறை. யாக்கோபின் கடவுள் தந்த நீதிநெறி. அவர் எகிப்துக்கு எதிராகச் சென்றபொழுது யோசேப்புக்கு அளித்த சான்று இதுவே. அப்பொழுது நான் அறியாத மொழியைக் கேட்டேன். பல்லவி

3. உங்களிடையே வேற்றுத் தெய்வம் இருத்தலாகாது. நீங்கள் அன்னிய தெய்வத்தைத் தொழலாகாது. உங்களை எகிப்து நாட்டினின்று அழைத்து வந்த கடவுளாகிய ஆண்டவர் நானே. பல்லவி

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி: (1 பேதுரு 1 : 25)**
அல்லேலூயா, அல்லேலூயா!
"நம் ஆண்டவரின் வார்த்தையோ என்றென்றும் நிலைத்திருக்கும்."
இவ்வார்த்தையே உங்களுக்கு அறிவிக்கப்பட்ட நற்செய்தி.
அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம்:**

இவர் தச்சருடைய மகன் அல்லவா?
எங்கிருந்து இந்த ஞானம் இவருக்கு வந்தது?

**✠ தூய மத்தேயு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம். 13 : 54 – 58**

அக்காலத்தில் இயேசு தமது சொந்த ஊருக்கு வந்து அங்குள்ள தொழுகைக்கூடத்தில் அவர்களுக்குக் கற்பித்தார். அதைக் கேட்டவர்கள் வியப்பில் ஆழ்ந்தார்கள். அவர்கள், "எங்கிருந்து இந்த ஞானம் இவருக்கு வந்தது? எப்படி இந்த வல்ல செயல்களைச் செய்கிறார்? இவர் தச்சருடைய மகன் அல்லவா? இவருடைய தாய் மரியா என்பவர் தானே? யாக்கோபு, யோசேப்பு, சீமோன், யூதா ஆகியோர் இவருடைய சகோதரர் அல்லவா? இவர் சகோதரிகள்

எல்லாரும் நம்மோடு இருக்கிறார்கள் அல்லவா? பின் இவருக்கு இவையெல்லாம் எங்கிருந்து வந்தன?'' என்றார்கள். இவ்வாறு அவரை ஏற்றுக்கொள்ள அவர்கள் தயங்கினார்கள். இயேசு அவர்களிடம், ``தம் சொந்த ஊரிலும் வீட்டிலும் தவிர மற்றெங்கும் இறைவாக்கினர் மதிப்புப் பெறுவர்'' என்றார். அவர்களுக்கு நம்பிக்கை இல்லாததால் அவர் அங்குப் பல வல்ல செயல்களைச் செய்யவில்லை.

**கிறிஸ்து வழங்கும் நற்செய்தி.**
**கிறிஸ்துவே! உமக்குப் புகழ்.**

**சிந்தனைக்கு:**
நதிமூலம் ரிஷிமூலம் இரண்டையும் பார்க்கக் கூடாது என்பார்கள். இந்த இரண்டையும் பார்த்தால் தாகம் ~ உடல் தாகம், ஆன்ம தாகம் ~ இரண்டும் தீராமல் தீங்குர நேரிடும். இந்த நதி எங்கே உற்பத்தியாகிறது, எங்கெல்லாம் ஓடுகிறது, என்னவெல்லாம் கலக்கிறது, யார் யார் கால்படுகிறது, என்ற கதையெல்லாம் ஆராய்ந்தால், உன் கதை ஒன்றும் நடக்காது. அது போலத்தான் துறவியும் குருக்களும். இவருக்கு எந்த ஊர்? எந்த சாதி? இது போன்ற ஆய்வுகள் சரியான புரிதலைத் தராத காரணத்தால் பல இழப்புககளைச் சந்திக்க நேரிடுவது இயல்பு. நடந்ததும் அதுதான். ``எங்கிருந்து இந்த ஞானம் இவருக்கு வந்தது? எப்படி இந்த வல்ல செயல்களைச் செய்கிறார்? இவர் தச்சருடைய மகன் அல்லவா? இவருடைய தாய் மரியா என்பவர்தானே? யாக்கோபு, யோசேப்பு, சீமோன், யூதா ஆகியோர் இவருடைய சகோதரர் அல்லவா? இவர் சகோதரிகள் எல்லாரும் நம்மோடு இருக்கிறார்கள் அல்லவா? பின் இவருக்கு இவையெல்லாம் எங்கிருந்து வந்தன?''

விளைவு, அங்கு அவர் பல வல்ல செயல்களைச் செய்யவில்லை. நல்லவைகள் மக்களுக்குக் கிடைக்கவில்லை. அடுத்தவரைப்பற்றிய தேவையற்ற ஆய்வுக்கு உட்படுவோமாயின் நம் நிலையும் இதுதான். அதற்கு மாறாக, அடுத்தவரைப்பற்றிய நன்மைகள், நல்லவைகள், நற்பண்புகள் இவற்றை அறிந்து கொள்ள முற்படுவோம். அது உறவை வளர்த்து நன்மைகளைப் பெற்றுத் தரும். நல்லவைகளைக் காண்போம் நற்பலன் பெறுவோம். செபிப்போம். வாழ்த்துக்கள். ஆசீர்.

**********